மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 317/23 |
| பெயர் | : | அஸ்வின் (PW3) |
| த/பெ. | : | பாலமுருகன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Kuttiraj is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of February 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் ஜம்புலிங்கபுரத்தில் வசிக்கிறேன்.நான் ஜான் தி பேப்டிஸ்ட் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறேன்.சம்பவ காலத்தில் அதே பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன்.அசா1 என் தாத்தா.அசா 2 என் பாட்டி.ஆஜர் எதிரியை தெரியும்.

2)20.09.2022 அன்று மாலை 6.40 மணிக்கு நான் என் ஆச்சி வீட்டு மாடியில் விளையாடிக்கொண்டிருந்தேன்.அப்போது நான் எதிரியின் வீட்டை எட்டிப்பார்த்தாக சொல்லி எதிரியின் மனைவி என் ஆச்சியிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.அப்போது அங்கு எதிரி மது போதையில் வந்து என் ஆச்சியின் வலது கன்னத்தில் அடித்து நெஞ்சில் எட்டி மிதித்து என் ஆச்சியின் வலது பக்க இடுப்பு எலும்பை உடைத்துவிட்டார்.நான் என் தாத்தாவிற்கும் என் அம்மாவிற்கும் போன் செய்து வரச்சொல்லி ஆட்டோவில் என் ஆச்சியை ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு ஊசிப்போட்டுவிட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் என் பக்கத்து வீட்டில் உள்ள எனது நண்பர் எடிசனின் போனில் இருந்து என் அம்மாவுக்கும் என் தாத்தாவிற்கும் போன் செய்தேன்.சம்பவ காலத்தில் எடிசனின் வயது 16.நானும் என் தம்பியும் மாடியில் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்தோம்.என் தம்பியின் பெயர் பெவின்.நான் மருத்துவமனைக்கு என் ஆச்சியுடன் செல்லவில்லை.இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.எங்களது வீடு என் ஆச்சியின்

வீட்டில் இருந்து தொலைவில் உள்ளது.எங்கள் வீட்டில் என் அம்மா, அப்பா , அண்ணன் , தம்பி உள்ளார்கள்.என் அம்மாவும் அப்பாவும் வேலைக்கு செல்வதால் நான் எப்போதும் ஆச்சியின் வீட்டில் இருப்பேன்.

2)நான் பள்ளிக்கு சென்றுவிட்டு வந்து என் நண்பரின் செல்போனில் கேம் விளையாடுவதாக சொல்லி என் தாத்தாவும் ஆச்சியும் சத்தம் போடுவார்கள் என்றால் சரிதான்.வீட்டில் இருந்து விளையாடினால் ஆச்சி சத்தம் போடுவார்கள் என்று நான் மாடியில் செல்போனை கொண்டு சென்று கேம் விளையாடுவேன் என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எதிரி தரப்பில் நான் அவர்கள் வீட்டை எட்டிப்பார்த்து புகைப்படம் எடுத்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து எதிரியிடம் அவர்களது வீட்டு பாத்ரூமை சரியான முறையில் கட்டுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான்.போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்து சென்றபின்னர் எத்தனை நாட்கள் கழித்து தாத்தாவோ , ஆச்சியோ புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.போலிசார் சத்தம்போட்டு சென்ற ஒரு வாரம் கழித்து தான் இந்த வழக்கு சம்பவத்தை பற்றி போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

3)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன நேரத்தில் இந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.நான் எதிரியின் மகளை புகைப்படம் விவகாரத்தில் என் மீது வழக்கு பதிவு செய்துவிடக்கூடாது என்பதற்காக என் ஆச்சி இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததில் தனக்கு ஏற்பட்டிருந்த காயத்தை பயன்படுத்தி பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.